தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 34/ந/2023
நாள் 08.08.2023

திரு.R.V.S.வீரமணி,
மணப்பாறை, திருச்சிராப்பள்ளி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மணப்பாறை நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, கரிக்கான்குளம் தெரு, கதவு எண்.63/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு.R.V.S.வீரமணி என்பவரின் 04.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.01.2023 அன்று பெறப்பட்டு 34/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, கரிக்கான்குளம் தெரு, கதவு எண்.63/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு.R.V.S.வீரமணி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை நகராட்சிக்கு கடந்த பிப்ரவரி 2022–ல் நடைபெற்ற நகர்மன்ற தேர்தலில் வார்டு எண்.17–ல் போட்டியிட்டு வெற்றி பெற்ற திருமதி.R.முத்துலெட்சுமி என்பவர் நகர்மன்ற துணைத்தலைவராகவும் உள்ளார். அவருடைய கணவர் பெயர் திரு.V.கோபி ஆகும்.

அவர், நடைபெற்ற நகர்மன்ற தேர்தலில் வார்டு எண்.17–ல் போட்டியிட நகராட்சியில் வேட்புமனு தாக்கல் செய்யும் போது உடன் படிவம் 3 மற்றும் 3A உறுதிமொழி ஆவணத்தில் உண்மையை மறைத்து தவறான தகவல்களை அலுவலகத்தில் அளித்து தேர்தலில் போட்டியிட்டுள்ளார். படிவம் 3A உறுதிமொழி ஆவணத்தில் தனது கணவர் வருமான வரி செலுத்துபவரா என்ற விபரத்தில் பூர்த்தி செய்யாமல் காலியாக விட்டு உள்ளார்.

மேலும், வரிசை எண்.14–ல் அசையா சொத்துக்கள் தனக்கும் தன்னை சார்ந்த கணவருக்கும் ஏதுமில்லை என்றும் தோராயமான நடப்பு சந்தை விலை ஏதும் இல்லை என்றும், தன் கணவர் சுய சம்பாத்திய சொத்து மதிப்பு ரூ 12,00,000/– என்றும் பரம்பரை சொத்துக்கள் தன் கணவர் பெயரில் ஏதும் இல்லை என்றும் கட்டுமானத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.65,00,000/– என்றும் ஆக மொத்தம் ரூ.77,55,000/– என்றும் குறிப்பிட்டுள்ளார். தன் கணவர் பெயரில் பரம்பரை சொத்துக்கள் இல்லை என்று சொல்லும் அவர் கட்டுமானத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.65,00,000/– என்பது எந்த சொத்தை குறிக்கும் என்பது சந்தேகமாக உள்ளது.

தன் கணவர் திரு.V.கோபி பெயரில் அரிசி ஆலை ஒன்று இயங்கி வந்ததை மறைத்து காண்பித்துள்ளார். மேலும், திருச்சிராப்பள்ளி பாலக்கரையில் உள்ள தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் அரிசி ஆலை மற்றும் அது சம்மந்தப்பட்ட சொத்துக்களை அடகு வைத்து 2013 ஆம் ஆண்டு ரூ 2,23,25,000/– கடனாக பெற்றுள்ளார். அந்த தொகையினை கடந்த 2020 ஆம் வருடம் ஜூலை மாதம் 8 ஆம் தேதி ரூ 2,63,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்து மூன்று இலட்சம் மட்டும்) வங்கியில் செலுத்தி திரும்ப வரவு வைத்து கடனாக இருந்த சொத்தை மீட்டுள்ளார். இவ்வளவு ரூபாய் மதிப்புள்ள சொத்தானது இன்றும் அவருடைய கணவர் திரு.கோபி பெயரில் உள்ளது. அதையும் உறுதிமொழி ஆவணத்தில் மறைத்துள்ளார்.

இது தவிர கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் தேதி மணப்பாறை சார்பதிவாளர் அலுவலகத்தில் திரு.ஆனந்தன் என்பவரிடம் ரூ 35,00,000/– பெற்றுக்கொண்டு கிரய உடன்படிக்கை பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார். இதுசம்பந்தமான பூர்வீக சொத்தையும் உறுதிமொழி படிவத்தில் மறைத்தது மட்டுமல்லாமல் இவ்வளவு தொகைகளுக்கு வருமான வரித்தொகை தன் கணவர் செலுத்தியுள்ளாரா அல்லது செலுத்தவில்லையா என்பது உறுதிமொழி ஆவணத்தில் பூர்த்தி செய்யாமல் மறைக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர்புற உள்ளாட்சி தேர்தலில் மணப்பாறை நகர்மன்ற உறுப்பினர் பதவிக்கு வேட்புமனு தாக்கல்செய்யும் போது உடன் தாக்கல் செய்யப்பட்ட படிவம்–3–ல் அரசு விதிகளுக்கு புறம்பாக தவறான தகவல் அளித்துள்ளார். எனவே, கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் தேதி தமிழக அரசால் அறிவிப்பு செய்யப்பட்ட அரசிதழ் எண்.197–ல் (G.O.(Ms) No.66, Municipal Administration and Water Supply (Election), 28th June 2017) அறிவிப்பின்படி in rule 24, after sub-rule (2), the following sub-rule shall be inserted, namely:- (2-A). (h) in view of the penal provisions contained in section 177 of the Indian Penal Code, 1860, in case of furnishing of false information by any candidate, if any, confirmed at a later date, the Returning Officer concerned may initiate criminal action against that candidate, after providing reasonable opportunity of hearing and by following the procedure contemplated in Section 195 of the Code of Criminal Procedure 1973. என்று அரசிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுத்து நகர்மன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் செய்யும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

அடுத்ததாக தனது நகர்மன்ற துணைத்தலைவர் என்ற பதவியை தவறாக பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து கடந்த நவம்பர் மாதம் 17–ம் தேதி மணப்பாறை நகராட்சியில் நடைபெற்ற பயனற்ற 5 லாரிகளுக்கான பொது ஏலத்தில் ஒப்பந்தகாரர் திரு.ஆனந்தன் என்பவர் பெயரில் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்கும், பொது ஏலத்தில் கலந்து கொள்வதற்கும் டெபாசிட் தொகை செலுத்தி தனது கணவர் திரு.V.கோபி என்பவரை ஒப்பந்ததாரர் திரு.ஆனந்தன் என்பவரிடம் பொது ஏலத்தில் தனது கணவர் கலந்து கொள்வதற்காக உறுதிமொழி ஆவணம் தயார் செய்து நகராட்சி ஆணையரிடம் அளித்து பொது ஏலத்தில் தனது கணவர் திரு.V.கோபி என்பவர் உயர்ந்தபட்ச ஏல கேள்வியாக கேட்டு 5 லாரிகளில் 4 லாரிகளை சுமார் ரூ 10,00,000/–த்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர் ஆனந்தன் என்பவர் கலந்து கொண்டுள்ளார். ஆனால் தனது பதவியினை தவறாக பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகத்தினால் தனது கணவரை ஏலத்தில் கலந்து கொள்ள செய்வது நகராட்சி சட்டவிதிகளுக்கு புறம்பான செயலாகும். நகராட்சிகளின் 1920 ஆம் வருடத்திய மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விதி 50 (1) (d)–ன்படி "Disqualification of Councilors" "(d) subject to the proviso to 1(clause (c) of sub – section (2) of Section 49), acquires any interest in any subsisting contract made with, or work being done, for the Council" நகராட்சிகளின் பொறியியல் நடைமுறை நூல்பிரிவு 1.1.3. (d) (2)–ன்படி As per the provision of the Engineering Manual no contractor shall normally be allowed to undertake Government works and there is a ban on participating in tenders by the Government servants, their close relatives, Councilors, Mayor etc., and their close relatives.

மேலும், பொது ஏலத்தில் ஒவ்வொரு வண்டியும் அதிகபட்ச கேள்வியாக கேட்டு முடித்தவுடன் நகர்மன்ற துணைத்தலைவர் அவர்களின் கணவர் திரு.கோபி என்பவர் அலுவலக ஆவணங்களில் கையொப்பம் இட்டுள்ளார். இதற்கும் அவர் பொது ஏலங்களில் கலந்து கொண்டதற்கும் அலுவலகத்தில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளையும், அலுவலகத்தால் எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகளையும் ஆய்வு செய்தால் உண்மைநிலை தெரியவரும்.

கடந்த ஒரு சில நாட்களுக்கு முன்பு அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய சுமார் ரூ 10,00,000/– செலுத்தி வாகனங்களை எடுத்து சென்றுள்ளார்கள். இது உண்மை சம்பவம்.

எனவே, தெரிந்தும் தேர்தலில் போட்டியிடும்போது தாக்கல் செய்த படிவம் 3, 3A உறுதிமொழி ஆவணங்களில் உண்மைகளை மறைத்தும் தவறான தகவல்களை அளித்ததற்காகவும், நகர்மன்ற துணைத்தலைவர் என்ற பதவியை தவறாக பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து தனது கணவர் V.கோபி என்பவரை பொது ஏலத்தில் கலந்துக்கொள்ள செய்து பயனடைந்ததற்காகவும் நகர்மன்ற துணைத்தலைவராக உள்ள திருமதி.R.முத்துலெட்சுமி என்பவரை அப்பதவியிலிருந்து பதவிநீக்கம் செய்யுமாறு மிகப்பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். இது மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாக அமையும்.

எனவே, தாங்கள் என்னை விசாரணைக்கு அழைக்கும்பட்சத்தில் நேரடியாக ஆஜராகி எனது தரப்பு ஆவணங்களையும் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் திரு.R.V.S.வீரமணி என்பவர் சமர்ப்பித்த முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை செய்யும் பொருட்டு பரிசீலனை செய்ததில், மனுதாரர் சமர்ப்பித்த இரண்டு புகார்களில், முதலாவது புகாரான மணப்பாறை நகராட்சி நகர்மன்றத் துணைத்தலைவர் திருமதி.R.முத்துலெட்சுமி என்பவர் பிப்ரவரி 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நகர்மன்ற தேர்தலில் போட்டியிடும் போது தனது சொத்துக்களை மறைத்து படிவம் 3, 3A ஆகிய ஆவணங்களில் தவறான தகவல்கள் அளித்து மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்கிற புகார் குறித்து விசாரணை மேற்கொள்ள 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் வரம்பிற்கு உட்படாததால் இப்புகார் குறித்து விசாரணை மேற்கொள்ள இயலாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, மனுதாரர் திரு.R.V.S.வீரமணி என்பவருக்கும் மற்றும் எதிர்மனுதாரரான மணப்பாறை நகராட்சி ஆணையாளருக்கும் இம்முறைமன்ற நடுவத்தால் தெரிவிக்கப்பட்டது.

3) மனுதாரரின் மற்றொரு புகாரான, மணப்பாறை நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.R.முத்துலட்சுமி என்பவர் தனது நகர்மன்ற துணைத்தலைவர் பதவியினை தவறாக பயன்படுத்தி நகராட்சியில் நடைபெற்ற ஏலத்தில் ஒப்பந்ததாரர் திரு.ஆனந்தன் என்பவரின் சார்பாக தனது கணவர் திரு.V.கோபி என்பவரை கலந்து கொள்ள செய்தது தொடர்பான புகாரினை இம்முறைமன்ற சட்டத்தின் கீழ் விசாரணை செய்யும் பொருட்டு, இப்புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் மணப்பாறை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

மணப்பாறை நகராட்சி ஆணையாளர் தனது 27.02.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு எண்.044/ந/2023-2 நாள் 17.02.2023-ன்படி திரு.R.V.S.வீரமணி என்பவர், மணப்பாறை நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் தனது பதவியினை பயன்படுத்தி தனது கணவரின் பெயரில் நகராட்சியில் ஏலம் எடுக்கப்பட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டதற்கு கீழ்க்கண்டவாறு விரிவான அறிக்கையையும் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

மணப்பாறை நகராட்சி அலுவலக குடிநீர் மற்றும் பொது சுகாதார பிரிவில் உள்ள உபயோகமற்ற கீழ்க்கண்ட வாகனங்களை கழிவு செய்ய 17.11.2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ. எண். | ஏலம் / ஒப்பந்தப் புள்ளி கோரிய வாகனங்களின் விபரம் | வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு | பொது ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் | | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | முன் வைப்புத் தொகை | முன்வைப்பு தொகை செலுத்திய நபர்களின் எண்ணிக்கை | முன் வைப்புத் தொகை | முன்வைப்பு தொகை செலுத்திய நபர்களின் எண்ணிக்கை |
| 1 | TDY 1660 | 1983 | ரூ 3500/– | 77 | ரூ 3500/– | 6 |
| 2 | TAX 2402 | 1988 | ரூ 3500/ | 77 | ரூ 3500/ | 6 |
| 3 | TN45 F 7276 | 1997 | ரூ 2500/ | 79 | ரூ 2500/ | 6 |
| 4 | TN45 J 8655 | 1998 | ரூ 2500/ | 80 | ரூ 2500/ | 6 |
| 5 | TN45 L 7670 | 2000 | ரூ 7000/ | 78 | ரூ 7000/ | 6 |

மேற்கண்ட கழிவு வாகனங்கள் பொது ஏலம் விடப்பட்டதில் ஒவ்வொரு வாகனத்திற்கும் 77 முதல் 80 நபர்கள் வரை பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். கலந்து கொண்டவர்கள் முன்னிலையில் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியாக ஏலம் நடத்தியதில் கலந்து கொண்டவர்களின் ஏலக்கேள்விகள் முறையாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் குறைந்தபட்சம் 17 முதல் 36 ஏலக்கேள்விக்குமேல் கேட்டு போட்டிபோட்டு ஏலத்தில் உயர்ந்தபட்ச கேள்வி உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதற்கான பதிவுகள் ஏல பதிவேட்டில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வாகனம் / வாகனம் எண். | பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, திருச்சிராப்–பள்ளி நிர்ணயித்த மதிப்பீடு தொகை ரூபாயில் | உயர்ந்தபட்ச விலை கோரியவர்களின் விபரம் | | | | நிர்ணயம் செய்யப் பட்ட தொகையை விட கூடுதலாக ஏலம் போன தொகை சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | திரு.வி.ஆனந்தன், 4/114, வலகப்பட்டி, கோவில்பட்டி | | சூர்யா பிரதர்ஸ், எம்.லெனின், ஜி1, சொக்கலிங்கபுரம், மணப்பாறை | | |
| | | | ஏலக் கேள்வியில் கோரப்பட்ட தொகை | ஒப்பந்தப் புள்ளியில் அளிக்கப் பட்ட தொகை | ஏலக் கேள்வியில் கோரப்பட்ட தொகை | ஒப்பந்தப் புள்ளியில் அளிக்கப் பட்ட தொகை | |
| 1 | குப்பை லாரி / TDY 1660 | 33,000/– | ரூ3,55,000/ | ரூ1,50,000/ | ரூ3,51,000/ | ரூ2,51,000/ | 975.76% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | குப்பை லாரி / TAX 2402 | 35,000/– | ரூ3,70,000/– | ரூ1,70,000/ | ரூ3,66,000/ | ரூ2,00,000/ | 914.29% |
| 3 | குப்பை லாரி / TN45 F 7276 | 21,000/– | ரூ1,80,000/– | ரூ 60,000/ | ரூ1,76,000/ | ரூ1,18,000/ | 757.14% |
| 4 | குப்பை லாரி / TN45 J 8655 | 22,000/– | ரூ1,75,000/– | ரூ 50,000/ | ரூ1,76,000/ | ரூ 99,000/ | 695.45% |
| 5 | குடிநீர் லாரி / TN45 L 7670 | 70,000/– | ரூ1,90,000/– | ரூ 70,000/ | ரூ1,86,000/ | ரூ 60,000/ | 171.43% |

ஏல இன வரிசை எண்.1–ல் உள்ள வாகனம் TDY 1660–க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.3,55,000/–ம் வரிசை எண்.2–ல் உள்ள வாகனம் TDX 2402–க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.3,70,000/–ம் வரிசை எண்.3–ல் உள்ள வாகனம் TN 45 F 7276–க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.1,80,000/–ம் மற்றும் வரிசை எண்.5–ல் உள்ள வாகனம் TN 45 L 7670–க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.1,90,000/–ம் திரு.வி.ஆனந்தன், ஏலக்கேள்வித் தொகை கோரியுள்ளார். மேற்படி வாகனங்களை திரு.வி.ஆனந்தன் என்பவர் கோரிய ஏலக்கேள்வியானது, பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, திருச்சிராப்பள்ளி, அவர்களால் நிர்ணயித்த மதிப்பீடு தொகையை விட 171.43 முதல் 975.76 சதவீதம் வரை கூடுதலாக உள்ளதால் திரு.வி.ஆனந்தன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை மன்றத்தின் அனுமதி பெற்று உத்தரவு வழங்கப்பட்டது. ஏல இன வரிசை எண்.4–ல் உள்ள வாகனம் TN45J 8655–க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ 1,76,000/– கோரிய சூர்யா பிரதர்ஸ், எம்.லெனின், ஜி1, சொக்கலிங்கபுரம், மணப்பாறை என்பவரின் ஏலக்கேள்வித் தொகையானது பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, திருச்சிராப்பள்ளி நிர்ணயித்த மதிப்பீடு தொகையை விட 757.14 சதவீதம் கூடுதலாக உள்ளதால் சூர்யா பிரதர்ஸ், எம்.லெனின் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை இந்நகர்மன்ற தீர்மான எண். 86 நாள் 30.11.2022–ன்படி அனுமதி பெறப்பட்டு உத்திரவு வழங்கப்பட்டது.

ஏல நிபந்தனைகளின்படி ஏலத்தில் முன்வைப்பு தொகை செலுத்தியவர்கள் ஏலத்தில் கலந்துகொள்ள வேண்டும் அல்லது அவருக்கு பதிலாக அவரது அங்கீகாரம் பெற்றவர் கலந்துகொள்ள நோட்டரி பப்ளிக் மூலம் உறுதிமொழி பத்திரம் சமர்ப்பித்து கலந்து கொள்ளவேண்டும். அதன்படி மேற்கண்ட ஏலத்தில் 7 நபர்கள் உறுதிமொழிபத்திரம் சமர்ப்பித்து ஏலத்தில் கலந்து கொண்டனர். மேற்கண்டபட்டியலில் கண்ட நபர்களில் திரு.வி.ஆனந்தன், 4/114, வலசுப்பட்டி, கோவில்பட்டி என்பவரின் உறுதிமொழி பத்திரத்தின்படி அவருக்கு பதிலாக திரு.V.கோபி, ஜீவா தெரு என்பவர் கலந்துகொள்ள அனுமதி கோரியதின்படி திரு.V.கோபி,

ஜீவா தெரு என்பவரை ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்ட ஏல நிபந்தனைகள் பின்பற்றப்பட்டுள்ளது.

1) இந்நகராட்சி அலுவலக குடிநீர் மற்றும் பொது சுகாதார பிரிவில் உள்ள கழிவு வாகனங்களை 17.11.2022 அன்று பகிரங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வெளிப்படையாக நடத்தப்பட்டது.

2) பொது ஏலத்தில் கலந்துகொள்ள இனம் வாரியாக முன்வைப்பு தொகை செலுத்திய 77 முதல் 80 நபர்களும் கலந்துகொண்டு ஏலக்கேள்விகள் கேட்டுள்ளனர்.

3) மேற்கண்ட கழிவு வாகனங்களுக்கு பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, திருச்சிராப்பள்ளி, நிர்ணயித்த மதிப்பீடு தொகையினை விட 171.43 முதல் 975.76 சதவீதம் வரை ஏலம் கோரப்பட்டுள்ளது.

4) திரு.வி.ஆனந்தன் 4/114, வலசுப்பட்டி, கோவில்பட்டி என்பவரின் உறுதிமொழி பத்திரத்தின்படி அவருக்கு பதிலாக திரு.V.கோபி, ஜீவா தெரு, என்பவர் கலந்து கொள்ள அனுமதி கோரியதின்படி திரு. V.கோபி, ஜீவா தெரு என்பவரை ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டது. மேலும் திரு. V.கோபி, ஜீவா தெரு என்பவர் நகர்மன்ற துணைத்தலைவரின் கணவர் என்பது எனக்கு தெரியாது. ஏலத்தில் கலந்து கொண்ட உள்ளூர் நபர்கள் கருத்துக்கள் ஏதும் தெரிவிக்கவில்லை. மேலும் திரு. V.கோபி, என்பவருக்கும் இந்நகராட்சிக்கும் எந்தவித ஒப்பந்தம் செய்யப்படவில்லை. திரு.வி.ஆனந்தன், 4/114, வலசுப்பட்டி, கோவில்பட்டி என்பவருக்கே உயர்ந்தபட்ச கேள்வி தொகை கோரப்பட்டதை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5) மேற்கண்ட ஏல நடைமுறைகளில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை. மேலும் மேற்கண்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியினை நகர்மன்ற தீர்மான எண்.86 நாள் 30.11.2022–ல் அனுமதி அளிக்கப்பட்டதால். திரு.வி.ஆனந்தன் என்பவருக்கு மேற்கண்ட நான்கு வாகனங்களுக்கு தொகை ரூ 10,95,000/– மற்றும் GST தொகை ரூ 1,97,100/– செலுத்தி வாகனத்தினை எடுத்துக்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி, ஏலக்கேள்வித் தொகை ரூ 10,95,000/– மற்றும் GST தொகை ரூ 1,97,100/– ஐ நகராட்சிக்கு செலுத்தியதால் திரு.வி.ஆனந்தன் என்பவருக்கு வாகனத்தினை எடுத்துச்செல்ல உத்தரவிடப்பட்டது.

மேற்கண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் திரு.R.V.S.வீரமணி என்பவரின் புகார்மனுவில் தெரிவித்தபடி, நகர்மன்ற துணைத்தலைவர் தனது பதவியினை பயன்படுத்தி தனது கணவரின் பெயரில் நகராட்சியில் ஏலம் எடுத்துள்ளார் என்பதற்கு எவ்வித முகாந்திரம் இல்லை. இப்புகார் மனு முற்றிலும் அடிப்படை ஆதாரமற்ற பொய்யான புகார் ஆகும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் மணப்பாறை நகராட்சி ஆணையரும் 28.02.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.02.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.R.V.S. வீரமணி, 28.02.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை நகராட்சியில் நகர் மன்ற துணைத் தலைவராக பதவி வகிக்கும் திருமதி முத்துலெட்சுமி என்பவரின் கணவர் திரு.V.கோபி என்பவர் அதிகார துஷ்பிரயோகம் செய்து, நகராட்சியில் நடைபெற்ற பயனற்ற 5 லாரிகளுக்கான பொது ஏலத்தில் வேறொரு நபரான திரு. ஆனந்தன் என்பவரின் பெயரில் கலந்துகொண்டுள்ளார். ஏலம் நடைபெறும்போது, ஏலத்தில் கலந்துக் கொண்டவர்களை மிரட்டி மேற்கண்ட 5 லாரிகளில் 4 லாரிகளை குறைந்த தொகையில் ஏலம் எடுத்துள்ளார். இதனால் நகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

பொது ஏலத்தில் ஒவ்வொரு வண்டியும் அதிகபட்ச கேட்பு கேட்கப்பட்டு, கேட்பு முடிந்தவுடன் நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி முத்துலெட்சுமி என்பவரின் கணவர் திரு.V.கோபி என்பவர் அலுவலக ஆவணங்களில் கையொப்பமிட்டுள்ளார். எனவே மேற்கண்ட திரு.V.கோபி என்பவர் பொது ஏலத்தில் கலந்துகொண்டது அலுவலகத்தில் உள்ள சிசிடிவி காமிராவில் பதிவாகியுள்ளது. எனவே, மேற்கண்ட சிசிடிவி காமிராவை ஆய்வு செய்தால், திரு.V.கோபி என்பவர் ஏலத்தில் கலந்துக்கொண்ட உண்மை தெரியவரும். எனவே, திரு.V.கோபி என்பவர் சட்டத்திற்கு புறம்பாக ஏலத்தில் கலந்துகொண்டது குறித்து விசாரணை செய்து, நகர் மன்றத் துணைத்தலைவரான அவரது மனைவி திருமதி.R.முத்துலெட்சுமி என்பவரின் மீது உரிய நடவடிக்கை எடுத்திட ஆவண செய்திடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான உறுதி மொழி பத்திரத்தின் நகல், ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் பெயர் பட்டியல் போன்ற விவரங்களின் நகல்களையும் மற்றும் திரு. வி. கோபி என்பவர் ஏலத்தில் கலந்துக்கொண்டது, மன்றக் கூட்டத்தில் சத்தம் போட்டு பேசியது போன்ற நிகழ்வுகள் குறித்து ஆடியோ பதிவு செய்யப்பட்ட பென் டிரைவ் (Pen Drive) இம்மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான மணப்பாறை நகராட்சி ஆணையாளர் 28.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மணப்பாறை நகராட்சியில் உபயோகமற்ற 5 பழைய வாகனங்களை 17.11.2022 அன்று ஏலம் விடப்பட்டது. மேற்கண்ட ஏலத்தில் ஒவ்வொரு வாகன ஏலத்திற்கும் 70–க்கும் மேற்பட்டோர் பொது ஏலத்தில் கலந்துகொண்டனர். ஏலத்தில் உயர்ந்தபட்சத் தொகை உறுதி செய்யப்பட்டது. மேற்கண்ட ஏலத்தில் திரு. ஆனந்தன் என்பவர் தனது சார்பாக திரு. கோபி என்பவரை கலந்துக்கொள்ளச் செய்திட வேண்டி நோட்டரி பப்ளிக் (Notary Public) கையொப்பத்துடன் கூடிய உறுதி மொழிப்பத்திரத்தை நகராட்சியில் சமர்ப்பித்திருந்தார். 30.11.2022 அன்று

மணப்பாறை நகராட்சி நகர் மன்றத் தீர்மான எண் 86 நாள் 30.11.2022ன்படி திரு ஆனந்தன் என்பவருக்கு ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட திரு. கோபி என்பவர், மணப்பாறை நகர் மன்றத் துணைத்தலைவர் திருமதி முத்துலெட்சுமி என்பவரின் கணவர் என்கின்ற விவரம் மேற்கண்ட ஏலம் முடிவு செய்யும் வரை எனக்கு தெரியாது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 27.02.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக பதிவு செய்திடுமாறு வேண்டி இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) மேலும் மணப்பாறை நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.R.முத்துலட்சுமி என்பவரும் 12.06.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.05.2023 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

(7) மணப்பாறை நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.R.முத்துலட்சுமி 12.06.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி, கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

''2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மணப்பாறை நகராட்சியில் உள்ள பயனற்ற 5 லாரிகளை பொது ஏலத்தில் விடும்போது எனது கணவர் திரு. V. கோபி என்பவர் திரு. ஆனந்தன் என்கின்ற ஒப்பந்ததாரர் சார்பாக கலந்துகொண்டு, பயனற்ற லாரிகளை ஏலம் விடப்பட்டதில் பங்கேற்றது எனக்குத் தெரியாது எனவும், மேலும் உள்ளாட்சி முறை மன்றத்திலிருந்து அறிவிப்பாணை கிடைக்கப்பெற்ற பின்னர்தான் எனது கணவர் திரு. V. கோபி அவர்கள் மேற்கண்ட ஏலத்தில் கலந்துகொண்ட விவரம் தெரியவந்தது எனவும், மேலும் எனது கணவர் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி கோரும்போது, விலைப்புள்ளி அளித்து பங்கேற்கவில்லை எனவும், ஆனால் Power Agent என்கின்ற முறையில் திரு. ஆனந்தன் சார்பாக எனது கணவர் கலந்துகொண்டார் என்பது தெரியாது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மணப்பாறை நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் மணப்பாறை நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையைச் சார்ந்த மனுதாரர் திரு.R.V.S. வீரமணி என்பவர் தனது 04.01.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் மணப்பாறை நகராட்சியில் நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.R.முத்துலட்சுமி என்பவர் அவரது நகர்மன்ற துணைத்தலைவர் பதவியினை தவறாக பயன்படுத்தி நகராட்சியில் நடைபெற்ற பழுதடைந்த உபயோகமற்ற வாகன

விற்பனை ஏலத்தில் ஒப்பந்ததாரர் திரு.ஆனந்தன் என்பவரின் சார்பாக தனது கணவர் திரு.V.கோபி என்பவரை கலந்து கொள்ள செய்தது குறித்து புகாராக தெரிவித்துள்ளார்.

அரசு தானியங்கிப் பணிமனையின் திருச்சிராப்பள்ளி மண்டல துணை இயக்குநரின் 31.12.2021 மற்றும் 07.05.2022 நாளிட்ட செயல்முறை நடவடிக்கைகளில் மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான 4 குப்பை லாரிகள் மற்றும் 1 குடிநீர் லாரி ஆகிய 5 வாகனங்கள் பயனற்று முதிர்ந்த நிலையில் உள்ளதால் கழிவு செய்து கொள்ளலாம் என்கிற ஆணை பெறப்பட்டதைத் தொடர்ந்து, இந்த வாகனங்களை பொது ஏலத்தில் விட நகராட்சியின் நகர்மன்றத்தில் 22.09.2022 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 28.10.2022 நாளிட்ட அறிவிப்பு வாயிலாக 17.11.2022 அன்று நகராட்சியில் ஏலம் நடத்தப்பட்டுள்ளது.

17.11.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்டவர்களில், ஒப்பந்ததாரர் திரு.வி.ஆனந்தன் என்பவர் ஏலத்தில் தனது சார்பாக கலந்து கொள்ள திரு.V.கோபி என்பவரை நியமனம் செய்யும் வகையில் நோட்டரி பப்ளிக் கையொப்பத்துடன் உறுதிமொழிப் பத்திரத்தை நகராட்சியில் சமர்ப்பித்துள்ளார். திரு.V.கோபி என்பவர் மணப்பாறை நகராட்சி துணைத்தலைவர் திருமதி.R.முத்துலட்சுமி என்பவரின் கணவராவார். ஏலத்தில் திரு.V.கோபி என்பவர் 4 வாகனங்களை (வாகன எண். TDY 1660, TDX 2402, TN 45 F 7276 மற்றும் TN 45 L 7670) உயர்ந்தபட்ச கேள்வித்தொகை கோரியதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர் திரு.வி.ஆனந்தன் என்பவருக்கு நகராட்சி தீர்மான எண்.86 நாள் 30.11.2022 மூலம் ஏலம் உறுதி செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சி ஆணையாளர் தனது வாக்குமூலத்தில் திரு.V.கோபி என்பவர் மணப்பாறை நகர்மன்றத் துணைத் தலைவர் திருமதி.R.முத்துலட்சுமி என்பவரின் கணவர் என்கிற விவரம் ஏலம் முடியும் வரை தனக்கு தெரியாது என தெரிவித்துள்ளார்.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 50 (1) (d) ன்கீழும், தற்போது நடைமுறையில் உள்ள 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் பிரிவு 32 (1) (e) ன்கீழும், ஒரு உறுப்பினர் அல்லது ஒரு தலைவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, அவருக்காகவோ அல்லது அவரது பங்குதாரருக்காகவோ நகராட்சியில் நடைபெற்ற ஏதேனும் ஒப்பந்தப்பணியில் அல்லது நடைபெற்றுவரும் ஒப்பந்தப்பணியில் துணைபோயிருந்து ஆதாயம் பெறுகிறார் எனில், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப்பிரிவு 35–க்கு உட்பட்டும் மற்றும் பிரிவு 12 (6) (c)–க்கு உட்பட்டும் தலைவர் அல்லது உறுப்பினர் பதவி வகிப்பதிலிருந்து நீக்கம் பெறுவார் என்பதை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Tamil Nadu Urban Local Bodies Act, 1998 Section 32. Disqualification of Chairperson or Councilor:-**

**(1) Subject to the provisions of section 35, a Councilor or a Chairperson shall cease to hold office as such if he –**

**(a) xxx**
**(b) xxx**

**(e) subject to the proviso to clause (c) of sub-section (6) of section 12, acquires any interest directly or indirectly, by himself or his partner, in any subsisting contract made with or work being done for the Municipality.**

மேலும், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.35, நாள் 10.03.2000–ல் நகராட்சிகளில் பணிமதிப்பீடு செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளில் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு வழிகாட்டும் வகையில் "பொறியாளர் கையேடு" (Engineering Manual) வெளியிடப்பட்டது. இக்கையேட்டில் Chapter XII –ல் Project Management Consultant என்கிற தலைப்பில் Annexure –I-Rules for Registration of Contractors என்கிற உட்தலைப்பில் பத்தி 2–ல் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதில் தடை என்கிற தலைப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. <u>BAN ON UNREGISTERED CONTRACTORS AND EMPLOYEES FROM TENDERING</u>:-**

**"No Contractor shall normally be allowed to undertake Government works, unless he is registered in the Departments according to rules prescribed. Ban on participating in tenders by the Government servants, their close relatives, Councilors, Mayor etc., and close relatives will apply".**

இந்நிலையில், மணப்பாறை நகராட்சியில் 17.11.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் மணப்பாறை நகராட்சியின் நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.R.முத்துலட்சுமி என்பவரின் கணவர் திரு.V.கோபி என்பவர், ஒப்பந்ததாரர் திரு.V.ஆனந்தன் என்பவரின் சார்பாக ஏலத்தில் கலந்து கொண்டுள்ளதன் மூலம் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 50 (1) (d)– ன்கீழும், மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள 1998 ஆம்

ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பிரிவு 32 (1) (e)–ன்கீழும் உட்பட்டிருப்பதால், இப்பொருள் குறித்து தக்க மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய ஆவணங்களுடன் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

2) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

3) ஆணையாளர், மணப்பாறை நகராட்சி,
மணப்பாறை – 621 306,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) திரு.R.V.S.வீரமணி,
63/1, கரிக்கான்குளம் தெரு,
மணப்பாறை – 621 306, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

5) திருமதி.R.முத்துலட்சுமி,
நகர்மன்ற துணைத்தலைவர்,
மணப்பாறை நகராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர் 9/8/23

09/08/23

சென்னை–600 032